# FIRE SAFETY IN THE HOME

# தீயிலிருந்து வீட்டில் பாதுகாப்பு பெறுதல்

FIRE KILLS

YOU CAN PREVENT IT

TAMIL


DPL 1003

Did you know…?

- You’re twice as likely to die in a fire if you don’t have a smoke alarm that works.
- 90 people die each year because the battery in their smoke alarm was flat or missing.
- Over half of home fires are caused by cooking accidents.
- More than five fires a day are started by candles.
- Every three days someone dies from a fire caused by a cigarette.
- Faulty electrics (appliances, wiring and overloaded sockets) cause around 7,000 house fires across the country every year.

## நீங்கள் அறிவீர்களா?

- இயங்கும் நிலையில் உள்ள புகையபாய அறிவிப்பு கருவி இல்லாத இடத்தில் தீவிபத்து ஒன்றில் நீங்கள் இறக்கும் சந்தர்ப்பம் இரட்டிப்பு மடங்கானது.
- புகையபாய அறிவிப்புக் கருவி-யில் மின்கலம் தீரந்து போவ-தால் அல்லது இல்லாதிருப்பதால் ஆண்டுதோறும் 90 பேர் இறக்கின்றனர்.
- வீட்டில் ஏற்படும் தீவிபத்துக்களில் பாதிக்குமேல் சமையல் செய்யும்போது நேரும் விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்றன.
- நாள் ஒன்றுக்கு ஐந்துக்கு மேற்பட்ட தீவித்துக்கள் மெழுகுவர்த்திகளினால் ஏற்படுகின்றன.
- சிகரெட் காரணமாக ஏற்படும் தீவிபத்துக்களால் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒருவர் இறந்துபோகிறார்.
- ஒவ்வோராண்டும், பழுதான மின்சார இணைப்புக்களால் (கருவிகள், கம்பி இணைப்புக்கள், அதிபாரமேறிய குழிவுகள (சொக்கெட்ஸ்) என்பன) காரணமாக நாடு முழுவதும் சுமார் 7,000 தீவிபத்துக்கள் வீடுகளில் ஏற்படுகின்றன.

# PROTECT YOUR HOME WITH SMOKE ALARMS

## புகையபாய அறிவிப்புக் கருவிகளைக் கொண்டு உங்கள் வீட்டைப் பாதுகாருங்கள்



The easiest way to protect your home and family from fire is with a smoke alarm.

Get it. Install it. Check it. It could save your life.

உங்கள் வீட்டையும் குடும்பத்தையும் தீயிலிருந்து பாதுகாப்பத-ற்கான மிக இலகுவான வழி புகையபாய அறிவிப்புக் கருவி ஒன்றை வைத்திருப்பதே.

புகையபாயக் கருவி ஓன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள் அதனைப் பொருத்திக்கொள்ளுங்கள் அதனைச் சோதித்துப் பாருங்கள் அது உங்கள் உயிரைப் பாதுகாக்கக்கூடும்.

# Choosing your smoke alarm

# உஙகள புகையபாய அறிவிப்பு கருவியை தெரிவு செயதல

- Fit smoke alarms on every level of your home.
- Smoke alarms are cheap and easy to install.
- They are available from DIY stores, electrical shops and most high street supermarkets.
- There are a variety of different models to choose from. Your local Fire and Rescue Service will be happy to give you advice on which one is best suited for you.
- Look out for one of these symbols, which shows the alarm is approved and safe.

- உங்கள் வீட்டின் ஒவ்வொரு தளத்திலும் புகையபாய அறிவிபபுக கருவிகளைப் பொருத்தவும்.
- அககருவிகள் மலிவானவை. அததுடன பொருத்துவதற்கு இலகுவானவை..
- அவை ‘நீங்களே செயயலாம்‘ (DIY) கடைகளிலும், மின்சார உபகரணக் கடைகளிலும் பெரும்பாலான பெருந்தெரு பெருஞ்சநதைகளிலும் (சுப்பர் மார்க்கெட்டுகள்) கிடைககும்.
- நீங்கள் தெரிவு செய்வதற்கு பல்வேறுவகை மாதிரிகள் உள்ளன. எது உஙகளுககு மிகவும பொருததமானதென ஆலோசனை வழஙக உஙகள் உள்ளுர் தீயணைபபு மறறும மீடபு சேவையினர மகிழசசியுடன தயாராயுளளனர்.
- இவவடையாள குறிகளில ஒன்று உண்டா எனப் பார்க்கவும். அது கருவி அங்கீகரிக்கப்பட்டதா அத்துடன் பாதுகாப்பானதா எனக்காட்டும்.

## Top tip

## ஒரு முக்கிய சேதி




**Fit smoke alarms**

**புகையபாய அறிவிப்புக் கருவிகளைப் பொருத்துங்கள்**

British Standard Kitemark

£5 உங்கள் உயிர் காக்கலாம்



# How to make sure your smoke alarm works

**Test the batteries in your smoke alarm every week. Change them every year. Never remove them.**

- Never disconnect or take the batteries out of your alarm if it goes off by mistake.
- Standard battery operated alarms are the cheapest option, but the batteries need to be replaced every year.
- A lot of people forget to check the batteries, so longer life batteries are better.
- An alarm with ten-year batteries is the best option.
- Mains-powered alarms are powered by your home power supply. Generally they don't need replaceable batteries, but need to be installed by a qualified electrician.
- Alarms that plug into a light socket use a rechargeable battery, which is charged when the light is on.
- You can even have linked alarms installed, so that when one alarm detects a fire they all go off together. This is useful if you live in a large house or over several levels.

Strobe light and vibrating-pad alarms are available for those who are deaf or hard of hearing. Contact the Royal Institute for Deaf People Information Line on **0808 808 0123**

# புகையபாய அறிவிப்புக் கருவி இயஙகுகிறதென உறுதிப்படுததுவதெப்படி

**வாராவாரம உஙகள புகையபாய அறிவிப்பு கருவியின மினகலஙகளை சோதிதது ஒவவோராணடும அவறறை மாற்றவும. அவற்றை கருவியிலிருநது அகற்றாதீர.**

- உங்கள் கருவி தவறி அபாய ஒலி எழுப்பினால இணைப்பைத் துண்டிககவோ மின்கலங்களை அகற்றவோ வேண்டாம்.
- நியம தர மின்கலங்களில் இயங்கும் கருவிகள மிக மலிவானவை. ஆயினும் இநத மினகலஙகள் ஒவவோராணடும் மாற-றபபடவேணடும.
- பலர் மின்கலங்களை சோதிக்க மறககின்றனர. ஆகவே நீண்ட ஆயுள் மின்கலங்கள் சிறந்தவை.
- பத்தாண்டு ஆயுள் கொண்ட மின்கலங்கள பொருத்திய கருவி ஓர் அதிசிறந்த தெரிவாகும்.
- வீட்டு 'மெயின்ஸ்'மின்சார வழங்கல் மூலம் இயங்கும கருவிகளுககு மாற்று மின்கலங்கள் தேவையில்லை. அவற்றை தேர்ச்சி பெற்ற மின்னியலாளர் ஒருவர் பொருத்துவது அவசியம்.
- மின்சார வெளிச்ச குழிவு ஒன்றினுள் செலுத்தப்படும் கருவிகள் மீள்வலு-ஊட்டப்படும் மின்கலத்தில இயங்குகின்றன. வெளிச்சம் ஏற்படும் நேரத்தில் மின்கலம் வலுவூட்டப்படுகிறது.
- இணைந்த கருவிகளையும் நீங்கள் பொருத்தலாம். இவ்வகையில், ஒரு கருவி தீயை கண்டுபிடித்தால் அனைத்துக் கருவிகளும் ஒன்றாக அபாய அறிவிப்பு செய்யும். பெரிய வீட்டு அல்லது பல்தள குடியிருப்பாளருக்கு இத்தகைய கருவியால் பயன் உண்டு.

காது கேட்காதவர்களுக்கென வெளிச்சம் வந்து அணையும், மற்றும் அதிர்வு ஏற்படுத்தும் கருவிகள் உள்ளன. செவிப்புலனற்றோருக்கான றோயல் இன்ஸ்டிடியூட் டின் தகவல் பிரிவுடன் **0808 808 0123** என்ற தொலைபேசி எண்மூலம் தொடர்பு கொள்ளவும்.


Top tip

முக்கிய சேதி




Test it

சோதித்துப் பாருங்கள்




## Fitting your smoke alarm

- Don't put alarms in or near kitchens or bathrooms where smoke or steam can set them off by accident.
- The ideal position is on the ceiling, in the middle of a room, or on the hallway and landing, so you can hear the alarm throughout your home.
- If it is difficult for you to fit your alarm yourself contact your local Fire and Rescue Service for help. They'll be happy to install it for you.



## உங்கள் புகையபாய அறிவிப்பு கருவியை பொருத்துதல்

- புகையபாய அறிவிப்புக் கருவிகளை சமையலறையிலோ குளியலறையிலோ அல்லது அவற்றை அண்மித்தோ பொருத்தாதீர். இவ்விடங்களில் வெளியாகும் புகை அல்லது நீராவி தற்செயலாக கருவியை இயங்கவைத்துவிடலாம்.
- வீட்டு முகடு, ஒர் அறையின் நடுப்பகுதி அல்லது வாயிலுக்குச் செல்லும் மண்டபவழியே சிறந்த இடமாகும். இதனால் வீடு முழுவதும் அபாய ஒலி கேட்கும்.
- கருவியை உங்களால் பொருத்த முடியாதுபோனால் உள்ளுர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையை உதவிக்கு அழைக்கவும். அவர்கள் அதனை உங்களுக்காகப் பொருத்தித் தருவதில் மகிழ்ச்சி அடைவார்கள்.





# Looking after your smoke alarm

- Make checking your smoke alarm part of your regular household routine.
- Test it by pressing the button until the alarm sounds. If it doesn't sound, you need to replace the battery.
- If your smoke alarm starts to beep on a regular basis, you need to replace the battery immediately.
- If it is a ten year alarm, you will need to replace the whole alarm every ten years.

## Other equipment you could consider

- Fire blankets are used to put out a fire or wrap a person whose clothes are on fire. They are best kept in the kitchen.
- Fire extinguishers shoot out a jet to help control a fire. They are quick and simple to use, but always read the instructions first.

# உங்கள் புகையபாய அறிவிப்புக் கருவியைப் பராமரித்தல்

- உங்கள் புகையபாய அறிவிப்புக் கருவியைச் சோதித்துப் பார்ப்பதை உங்கள நாளாந்த கடமைகளில் ஒன்றெனக் கொள்ளுங்கள்.
- அபாய ஒலி கிளம்பும் வரை பொத்தானை அழுத்துவதன் மூலம் சோதனையைச் செய்து பார்க்கவும். ஒலி வராவிடில மின்கலத்தை நீங்கள் மாற்றவேண்டும்..
- ஒரு கிரமமான முறையில் அடிக்கடி உங்கள் புகையபாய அறிவிப்புக் கருவி 'பீப்' என்று ஒலியெழுப்பத் தொடங்கினால் உடனடியாக மின்கலத்தை மாற்ற வேண்டும்.
- பத்தாண்டுகள் இயங்கும் கருவியானால் கருவி முழுவதையும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாற்ற வேண்டும்.


## நீங்கள் கருத்தில் கொள்ளக்கூடிய இதர கருவிகள்.

- தீயணைப்புப் போர்வைகள் பரவும் தீயை அணைக்கவோ, பற்றி எரியும் ஆடைகளுடன் காணப்படும் ஆளொருவரைச் சுற்றிப் போர்த்தவோ பயன்படுபவை. அவற்றை சமையலறையில் வைத்திருப்பது சிறந்தது.
- தீயணைப்புக் கருவிகள் பரவும் தீயை அணைக்க உதவும் வகையில் எறிவீச்சு செய்வனவாகும்.. அவற்றை துரிதமாகவும் எளிதாகவும் கையாளலாம். ஆனாலும் அறிவுறுத்தல்களை முதலில் படிப்பது எப்போதும் அவசியம்.




**Test it**

சோதித்துப் பாருங்கள்



**Change it**

மாற்றுங்கள்



**Replace it**

பதிலீடு செய்யுங்கள்

# HOW TO PREVENT COMMON FIRES

IN THE KITCHEN
ELECTRICS
CIGARETTES
CANDLES

This section will tell you how you can avoid fires in your home, including how to cook safely and take care with electrics, candles and cigarettes.

பொதுவான தீவிபத்துக்களை தடுப்பது எப்படி சமையலறையில் மின்சாரக் கருவிகள் விடயத்தில் சிகரெட்டுக்கள் மெழுகுவர்த்திகள்

உங்கள் வீட்டில், பாதுகாப்பாக சமைப்பது எப்படி, மற்றும் மின்னிணைப்புக்கள் மெழுகுவர்த்திகள், சிகரெட்டுக்கள்,என்பன மட்டில் அவதானமாயிருப்பது உட்பட, தீவித்துக்கள் ஏற்படாது எப்படித் தடுக்கலாம் என இப் பாகத்தில் விளக்கப்படுகிறது.

# In the kitchen

## How to cook safely

**Avoid leaving children in the kitchen alone when cooking on the hob. Keep matches and sauce pan handles out of their reach to keep them safe.**

- Take extra care if you need to leave the kitchen whilst cooking, take pans off the heat or turn them down to avoid risk.
- Make sure saucepan handles don't stick out – so they don't get knocked off the stove.
- Take care if you're wearing loose clothing – they can easily catch fire.
- Keep tea towels and cloths away from the cooker and hob.
- Spark devices are safer than matches or lighters to light gas cookers, because they don't have a naked flame.
- Double check the cooker is off when you've finished cooking

## Take care with electrics

- Keep electrics (leads and appliances) away from water.
- Check toasters are clean and placed away from curtains and kitchen rolls.
- Keep the oven, hob and grill clean and in good working order. A build up of fat and grease can ignite a fire.

**Don't put anything metal in the microwave**

## Deep fat frying


- Take care when cooking with hot oil – it sets alight easily.
- Make sure food is dry before putting it in hot oil so it doesn't splash.
- If the oil starts to smoke – it's too hot. Turn off the heat and leave it to cool.
- Use a thermostat controlled electric deep fat fryer. They can't overheat.


## What to do if a pan catches fire


- Don't take any risks. Turn off the heat if it's safe to do so. Never throw water over it.
- Don't tackle the fire yourself.

Top tip

முக்கிய சேதி







**Keep out of reach**

கைக்கெட்டாது பார்த்துக்கொள்ளுங்கள்



# சமையலறையில்

## எவ்வாறு பாதுகாப்பாக சமைப்பது

**வெந்தட்டில் (ஹொப்) சமைக்கும்போது சமையலறையில் சிறார்களை தனியே விடாதீர். தீக்குச்சிகளையும் கொதிபாத்திரக் கைப்பிடிகளையும் அவர்கள் கைக்கு எட்ட விடாதீர்.**


- சமையல்நேரம் சமையலறையிலிருந்து நீங்குவதாயின் அதிககவனம் தேவை. பாத்திரங்களை அடுப்பிலிருந்து எடுத்துவிடுங்கள் அல்லது அடுப்பை தணித்துவிடுங்கள்.
- கொதிபாத்திரங்களின் கைப்பிடிகள் வெளியே நீட்டாதிருக்க உறுதி செய்து - அவை அடுப்பிலிருந்து விழாது பார்த்துக்கொள்ளுங்கள்.
- தளர்ந்த ஆடைகளை அணிந்திருந்தால் கவனம் - அவற்றில் இலகுவாக தீ பற்றிவிடலாம்.
- துவாலைகளையும் துணிகளையும் அடுப்பிலிலிருந்து தூரமாக வையுங்கள்.
- எரிவாயு அடுப்புக்களைப் பற்ற வைக்க, தீக்குச்சிகளையும் லைட்டர்களையும் விட பொறி ஏற்படுத்தும் கருவிகள் பாதுகா-ப்பானவை. ஏனெனில் அக்கருவிகளில் தீச்சுவாலை வருவதில்லை.
- சமையல் முடிந்ததும் அடுப்பு அணைக்கப்பட்டதாவென ஒன்றுக்கு இருதடவை சரிபாருங்கள்.

**Top tip**

**முக்கிய சேதி**








**Take care with hot oil**

கொதிக்கும் எண்ணெய் குறித்து கவனமாயிருங்கள்

## மின்சாரக் கருவிகள் விடயத்தில் கவனமாயிருங்கள்

- மின்சாரக் கருவிகளிலும் (அவற்றின் பொருத்துத் தலைகளிலும்) நீர் படாதவாறு பேணுங்கள்.
- ரொட்டித்தட்டுக்களை சுத்தமாக, ஜன்னல் திரைகள், காகிதச்சுருள்களுக்கு அப்பால் இருத்தல் வேண்டும்.
- வெதுப்பகம், வெந்தட்டு, இறைச்சி வேகும் சட்டி என்பனவற்றை சுத்தமாக, செம்மையான நிலையில் வைத்திருங்கள். இவற்றில் கொழுப்பும் நெய்யும் செறிந்தால் தீப்பற்றலாம்.

**மைக்ரோவேவில் உலோகப் பொருளை வைக்காதீர்.**

## கொழுப்பு அகலப் பொரித்தல்

- கொதி எண்ணெயில் சமைக்கும்போது கவனம் - அது தீப்பற்றக்கூடியது.
- கொதி எண்ணெய் சிதறாதிருக்க, அதில் இடப்படும் உணவு உலர்ந்து இருத்தல் அவசியம்.
- எண்ணெயிலிருந்து புகை வந்தால் - அது மிகவும் சூடேறியுள்ளது என்று அர்த்தம். சூட்டை தணித்து எண்ணெயை குளிர்வடைய விடுங்கள்.
- வெப்பச்சீராக்கல் சாதனம் கொண்ட, ஆழப் பொரிக்கும் மின்பொறியை பயன்படுத்துங்கள். அது அளவுமீறி சூடாகமாட்டாது.

## சட்டியில் தீப்பற்றினால் என்ன வெய்வது

- அவசரப்பட்டு எதுவம் செய்யாதீர்.இயலுமானால் பத்திரமாக சூட்டை நிறுத்துங்கள். அதன்மேல் நீரை ஊற்றாதீர்.
- தீயை அணைக்கமுயலவேண்டாம்.

**வெளியேறுங்கள்**

**வெளியே நில்லுங்கள் அழையுங்கள**

**999**



# Electrics

# மின்சாரக் கருவிகள்

## How to avoid electrical fires


- Always check that you use the right fuse to prevent overheating.
- Make sure an electrical appliance has a British or European safety mark when you buy it.
- Certain appliances, such as washing machines, should have a single plug to themselves, as they are high powered.
- Try and keep to one plug per socket.


## மின்சாரத்தினால் ஏற்படும் தீயைத் தவிர்ப்பது எப்படி

- மிதமிஞ்சிய மின்சார உள்ளீட்டைத் தடுக்க சரியான ஃப்யூஸை உபயோகிக்கிறீர்களா என எப்போதும் சரி பாருங்கள்.
- நீங்கள் வாங்கும் மின்சார உபகரணத்தில் பிரித்தானிய அல்லது ஐரோப்பிய பாதுகாப்புக் குறி இடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- சலவை எந்திரங்கள் போன்ற சில பொறிகளுக்கு தனியாக சொருகுத்தலை (ப்ளக்) வேண்டும். ஏனெனில் அவை வலு கூடியவை.
- ஒரு குழிவுக்கு ஒரு சொருகுத்தலை இருக்க இயலுமானவரை பார்த்துக்கொள்ளவும்.

**Top tip**

**முக்கிய சேதி**






**Don't overload**

மிதமிஞ்சிப் பாரமேற்றாதீர்.

5 + 5 + 3 = 13

AMP AMP AMP AMP



## Know the limit!

**An extension lead or adaptor will have a limit to how many amps it can take, so be careful not to overload them to reduce the risk of a fire.**

**Appliances use different amounts of power – a television may use a 3amp plug and a vacuum cleaner a 5amp plug for example.**

## வரம்பை அறிந்துகொள்க!

ஒரு நீடிப்புத் தலை (எக்ஸ்டென்ஷன் ஹெட்) அல்லது மாற்றி (அடப்டர்) எத்தனை மின்னோட்ட அலகுகளை (அம்ப்) தாங்கும் என்று வரையறைப்படுத்தப்பட்டிருக்கும். ஆகவே அந்த வரம்புக்குமேல் பாரமேற்றாது எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

கருவிகள் வெவ்வேறு அளவுகளில் மின்வலுவை பயன்படுத்துகின்றன – உதாரணமாக தொலைக்காட்சி 3 அலகு சொருகுத்தலையையும் ஒரு வாயுசூன்ய சுத்திகரிப்பு கருவி 5 அலகு சொருகுத் தலையையும் பயன்படுத்தக்கூடும்.

## Keep electrical appliances clean and in good working order to prevent them triggering a fire.

- Keep your eyes peeled for signs of dangerous or loose wiring such as scorch marks, hot plugs and sockets, fuses that blow or circuit-breakers that trip for no obvious reasons, or flickering lights.
- Check and replace any old cables and leads, especially if they are hidden from view – behind furniture or under carpets and mats.
- Unplugging appliances helps reduce the risk of fire.
- Unplug appliances when you're not using them or when you go to bed.

### Using an electric blanket

- Don't leave electric blankets folded as this damages the internal wiring. Store them flat or rolled up instead.
- Unplug blankets before you get into bed, unless it has a thermostat control for safe all-night use.
- Try not to buy second hand blankets and check regularly for wear and tear.

### Portable heaters

- Try to secure heaters up against a wall to stop them falling over.
- Keep them clear from curtains and furniture and never use them for drying clothes.

### Furniture

- Always ensure that your furniture has the fire-resistant permanent label.




## மின்சார கருவிகளால் தீ பற்றுவதைத் தடுக்க அவற்றை சுத்தமாகவும் செம்மையாக வைத்திருங்கள்

- எரியுண்ட குறிகள், சூடான சொருகுதலைகள் மற்றும் குழிவுகள், எரியுண்ட ஃப்யூஸ்கள், காரணமின்றி மின்சார வழங்கலை நிறுத்தும் மின் சுற்றுத் தடங்கள் அல்லது மங்கி மங்கி எரியும் பல்புகள் என்பன அபாயகரமான அல்லது தளர்ந்த மின்சார கம்பி இணைப்புகளுக்கு அறிகுறிகளாகும். விழிப்பாக இருங்கள்.
- பழைய கேபிள்களையும் சொருகு-தலைகளையும் சோதித்து மாற்றுங்கள். குறிப்பாக மறைவிடங்களில் உள்ளவற்றைப் பரிசோதியுங்கள்.
- கருவிகளை குழிவுகளிலிருந்து அகற்றி வைப்பதால் தீ அபாயம் குறைகின்றது.
- நீங்கள் கருவிகளை பயன்படுத்தாதபோது அல்லது படுக்கைக்குச் செல்லும்போது அவற்றை குழிவுகளிலிருந்து அகற்றி வையுங்கள்.

### மின்சார கம்பளியை பயன்படுத்தல்

- மின்சாரக் கம்பளிகளை மடித்து வையாதீர். ஏனெனில் அவ்வாறு செய்வது அதன் உள்ளக மின்கம்பி பின்னலுக்கு ஊறு ஏற்படும். அவற்றை நிமிர்த்தியோ அல்லது சுருட்டியோ களஞ்சியப்படுத்துங்கள்.
- பாதுகாப்பாக இரவு முழுவதும் உபயோகிக்க, வெப்பச்சீராக்கல் சாதனம் இருந்தாலொழிய கம்பளிளை குழிவுகளிலிருந்து அகற்றிவிடுங்கள்.
- உபயோகித்த கம்பளிகளை வாங்காதீர். கம்பளிகளில் தேய்வுகள் ஊறுகள் ஏற்படுகின்றனவா என கிரமமாக பரிசோதித்துப் பாருங்கள்.

### கொண்டுசெல்லக்கூடிய சூடேற்றிகள்

- சூடேற்றிகளை, அவை விழாமலிருக்க, சுவருடன் பொருத்துங்கள்
- ஜன்னல் திரைகள் தளபாடங்களுக்கு தூரமாக அவற்றை வைத்திருங்கள். அவற்றின்மீது துணிகளை வைத்து உலர்த்தாதீர..

### தளபாடங்கள்

- உங்கள் தளபாடங்கள் நிரந்தர தீ எதிர்ப்பு லேபல் கொண்டிருப்பதை உறுதி செய்க.

# Cigarettes

**Stub cigarettes out properly and dispose of them carefully. Put them out. Right out!**

- Never smoke in bed.
- Use a proper ashtray – never a wastepaper basket.
- Make sure your ashtray can't tip over and is made of a material that won't burn.
- Don't leave a lit cigarette, cigar or pipe lying around. They can easily fall over and start a fire.
- Take extra care if you smoke when you're tired, taking prescription drugs, or if you've been drinking. You might fall asleep and set your bed or sofa on fire.
- Keep matches and lighters out of children's reach.
- Consider buying child resistant lighters and match boxes.

# சிகரெட்டுக்கள்

**புகைத்த சிகரெட்டுக்களை தேய்த்து அணைத்து கவனமாக அகற்றுங்கள். அணைத்துவிடுங்கள். முற்றாக அணைத்துவிடுங்கள்!**

- படுக்கையில் ஒருபோதும் புகைக்காதீர்.
- முறையான சாம்பல்தட்டை உபயோகியுங்கள் - கழிவுக்காகிதக்கூடையை அல்ல.
- உங்கள் சாம்பல்தட்டு சரிந்து விழலாகாது. அது தீப்பிடித்து எரியாத பொருளில் ஆக்கப்பட்டிருப்பதையும் உறுதிசெய்து கொள்ளவும்.
- பற்ற வைத்த சிகரெட்டோ சுருட்டோ பைப்போ கவனிப்பாரற்று கிடக்கலாகாது. அவை விழுந்து தீபரவலாம்.
- நீங்கள் களைத்திருக்கையில், மருந்து எடுக்கும் வேளையில் அல்லது மது அருந்தும்போது புகைப்பீரகளென்றால் விசேட கவனம் செலுத்தவும். நீங்கள் உறங்கிவிட,உங்கள் கட்டிலில் அல்லது சோபாவில் தீ பற்றலாம்
- தீக்குச்சிகளையும் லைட்டர்களையும் சிறார் கைக்கு எட்டாத இடத்தில் வையுங்கள்.
- சிறார் கையாள முடியாத லைட்டர்களையும் தீப்பெட்டிகளையும் வாங்குங்கள்.

## Top tip

முக்கிய சேதி







**Put them out. Right out!**

அணைத்துவிடுங்கள். முற்றாயாக அணைத்துவிடுங்கள்!

**Matchboxes now carry this warning label**




இவ்வெச்சரிக்கை இப்போது தீப்பெட்டிகளில்.

# Candles

# மெழுகுவர்த்திகள்

**Make sure candles are secured in a proper holder and away from materials that may catch fire – like curtains.**


- Put candles out when you leave the room, and make sure they're put out completely at night.
- Use a snuffer or a spoon to put out candles. It's safer than blowing them out when sparks can fly.
- Children shouldn't be left alone with lit candles.

**மெழுகுவர்த்திகள் பொருத்தமான ஒரு பிடிதாங்கியில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டு தீப்பிடிக்கக்கூடிய கதவு ஜன்னல் திரைகள் போன்றவற்றுக்குத் தூரமாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.**


- அறையிலிருந்து வெளியேறும்போது மெழுகுவர்த்திகளை அணைத்து-விடுங்கள். இரவில் அவை முற்றாக அணைக்கப்படவேண்டும்.
- மெழுகுவர்த்திகளை அணைப்பதற்கு ஒரு நறுக்கியை அல்லது கரண்டியை பயன்படுத்துங்கள். பொறிகள் பறக்கும் விதத்தில் ஊதி அணைப்பதை விட அது பாதுகாப்பான முறையாகும்.
- ஏற்றிய மெழுகுவர்த்திகளுடன் சிறார்களைத் தனியே விடலாகாது.

## Top tip

## முக்கிய சேதி







**Be careful with candles**

**மெழுகுவர்த்திகளை கவனமாகக் கையாளுங்கள**



# PLAN A SAFE ESCAPE

# பாதுகாப்பாக தப்புவதற்கு திட்டமிடுங்கள்

**Fitting a smoke alarm is the first crucial step to protecting yourself from fire. But what would you do if it went off during the night?**

**This section will help you make a plan ready for an emergency.**

தீயபாயத்திலிரந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீங்கள் எடுக்கவேண்டிய முதலாவது முக்கிய நடவடிக்கை புகையபாய அறிவிப்புக் கருவி ஒன்றைப் பொருத்திக்கொள்வதாகும். ஆயினும் அது இரவின் நடுவே அபாய ஒலி எழுப்பினால் நீங்கள் என்ன செய்வீரகள்?


அவசரவேளைக்கென ஒரு திட்டத்தைத் தயாரித்து வைப்பதற்கு இந்தப் பகுதி உங்களுக்கு உதவும்.

# Be prepared by making a plan of escape

# தப்பிச்செல்லும் திட்டமொன்றை உருவாக்கித் தயாராக இருங்கள்

- Plan an escape route and make sure everyone knows how to escape.
- Make sure exits are kept clear.
- The best route is the normal way in and out of your home.
- Think of a second route in case the first one is blocked.
- Take a few minutes to practice your escape plan.
- Review your plan if the layout of your home changes.


- தப்பிச்செல்லும் வழி ஒன்றைத் தயாரித்து, ஒவ்வொருவரும் எப்படித் தப்புவதென்று அறிந்துகொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- வெளியேறும் வழிகள் தடங்கலற்று இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- அதி சிறந்த வழி உங்கள் வீட்டுக்கு வழமையாக செல்லவும் வெளியேறவும் உபயோகிக்கும் வழியாகும்.
- முதலாவது வழி தடைப்பட்டு-இருந்தால் இரண்டாவது தப்பும் வழி பற்றிச் சிந்தியுங்கள்.
- உங்களது தப்பிச்செல்லும்திட்டத்தைப் பயில்வதில் சில நிமிடங்களை செலுத்துங்கள்.
- உங்கள் வீட்டின் அமைப்பு மாற்றம் அடையுமானால் உங்கள் திட்டத்தை மீளாய்வு செய்யுங்கள்.



**Top tip**

**முக்கிய சேதி**





**Plan an escape route**

தப்பும் வழி ஒன்றைத் தயாரியுங்கள்.

**Keep door and window keys where everyone can find them**

கதவுகளினதும் ஜன்னல்களினதும் சாவிகளை ஒவ்வொருவரும் கண்டு எடுக்கக்கூடியதான இடத்தில் வையுங்கள்.

# What to do if there is a fire

**Don’t tackle fires yourself. Leave it to the professionals.**

- Keep calm and act quickly, get everyone out as soon as possible.
- Don’t waste time investigating what’s happened or rescuing valuables.
- If there’s smoke, keep low where the air is clearer.
- Before you open a door check if it’s warm. If it is, don’t open it – fire is on the other side.
- Call 999 as soon as you’re clear of the building. 999 calls are free.

# தீப்பிடித்தால் என்ன செய்வது

நீங்களாக தீயைக் கையாளாதீர். அதனை தொழில்வல்லுநர்களிம் விட்டுவிடுங்கள்

- அமைதியாகவும் துரிதமாகவும் செயற்படுங்கள். இயலுமான அளவு விரைவாக ஒவ்வொருவரையும அவ்விடத்திலிருந்து வெளியேற்றவும்.
- என்ன நடந்துள்ளது என்று ஆராய்வதிலோ அல்லது பெறுமதியானவற்றை மீட்பதிலோ நேரத்தை விரயமாக்காதீர.
- புகை கிளம்பினால் காற்று சீராக உள்ள இடமாகப் பார்த்து தாழ அமர்ந்திருங்கள்.
- கதவு ஒன்றைத் திறக்குமுன் அது சூடேறிப்போயிருக்கிறதா எனப் பாருங்கள். அவ்வாறிருந்தால் கதவைத் திறக்காதீர - மறுபக்கம் தீ பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.
- கட்டடத்தை விட்டு அகன்றதும் உடனடியாக 999 என்ற இலக்கத்தை அழையுங்கள். 999 எண்ணுக்கு எடுக்கப்படும் அழைப்புக்கள் இலவசமானவை.

Top tip

முக்கிய சேதி




**Get out, stay out and call 999**

**வெளியேறுங்கள், வெளியே நில்லுங்கள், அழையுங்கள் 999**

# What to do if your clothes catch fire

# உங்கள் ஆடையில் தீப்பற்றினால் என்ன செய்வது

- Don't run around, you'll make the flames worse.
- Lie down and roll around. It makes it harder for the fire to spread.
- Smother the flames with a heavy material, like a coat or blanket.
- Remember, Stop, Drop and Roll!

- சுற்றிச்சுற்றி ஓடவேண்டாம்.. இதனால் தீச்சுவாலை மோசமாக அதிகரிக்கும்.
- கீழே விழுந்து புரளுங்கள். இதனால் தீ பரவ முடியாது போகும்.
- கோட்டு, போர்வை போன்ற கனமான பொருள கொண்டு சுவாலைமீது அழுத்துங்கள்.
- நினைவில் கொள்ளுங்கள், நில்லுங்கள், விழுங்கள் உருண்டு புரளுங்கள்!






**STOP!**
நில்லுங்கள்!



**DROP!**
விழுங்கள்!



**ROLL!**
உருண்டு புரளுங்கள்!

# What to do if your escape is blocked

# தப்பும் வழி தடைப்பட்டால் என்ன செய்வது

- If you can't get out, get everyone into one room, ideally with a window and a phone.
- Put bedding around the bottom of the door to block out the smoke, then open the window and call "HELP FIRE".
- If you're on the ground or first floor, you may be able to escape through a window.
- Use bedding to cushion your fall and lower yourself down carefully. Don't jump.

**If you can't open the window break the glass in the bottom corner. Make jagged edges safe with a towel or blanket.**

- உங்களால் வெளியேற இயலாவிட்டால் அனைவரையும் ஜன்னலும் தொலைபேசியும் உள்ள அறை ஒன்றில் ஒன்றுகூட வையுங்கள்.
- புகை உள்வருவதைத் தடுக்க அறைக்கதவின் அடியில் படுக்கை விரிப்புக்களை போட்டு, ஜன்னலைத் திறந்து, 'உதவுங்கள்! தீ விபத்து' என்று குரல் எழுப்புங்கள்.
- கட்டடத்தின் தரைத் தளத்தில் அல்லது முதல் தளத்தில் நீங்கள் இருந்தால், ஜன்னல் ஒன்றின் வழியாக நீங்கள் தப்ப முடியும்.
- அடிபடாமல் விழ படுக்கை விரிப்புக்களை பயன்படுத்துங்கள். பின்னர் கவனமாக கீழே இறங்குங்கள். குதிக்காதீர்.

ஜன்னலைத் திறக்க முடியாவிட்டால் கீழ் மூலையில் கண்ணாடியை உடையுங்கள். உடைந்த கண்ணாடியின் கூர் முனைகள் மீது பாதுகாப்புக்காக துவாலையையோ கம்பளியையோ இடவும்.



# How to escape from a high level building


# உயர்ந்த கட்டடத்திலிருந்து தப்புவது எப்படி

- Avoid using lifts and balconies if there is a fire.
- It is easy to get confused in smoke, so count how many doors you need to go through to reach the stairs.
- Check there is nothing in the corridors or stairways that could catch fire – like boxes or rubbish.
- Make sure doors to stairways are not locked.
- Make sure everyone in the building knows where the fire alarms are.
- You should still get a smoke alarm for your own home, even if there is a warning system in the block.

- தீவிபத்து ஏற்பட்டால் உயர்த்து-பொறிகளையோ (லிப்ட்) முன-மாடிகளையோ (பல்கனி) உபயோகிக்காதீர்.
- புகையின் நடுவே குழப்பமடைவது இயல்பு. ஆகவே மாடிப்படிகளை அடைவதற்கு முன் எத்தனை கதவுகளைத் தாண்டவேண்டும் என எண்ணிப்பார்த்துக் கொள்ளுங்கள்.
- செல்லும் வழிகளில் அல்லது மாடிப்படிக்கட்டுக்களில் தீப்பிடிக்கக்கூடிய பெட்டிகள் அல்லது குப்பை கூழம் போன்றவை இல்லாது பார்த்துக் கொள்ளுங்கள்.
- மாடிப்படிக்கட்டுகளுக்கு இட்டுச் செல்லும் வழியில் உள்ள கதவுகள் பூட்டப்படாதிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- தீயபாய அறிப்புக் கருவிகள் எங்கே உள்ளன என்று கட்டடத்தில் உள்ள ஒவ்வொருவரும் அறிந்திருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- கட்டடத் தொகுதியில் அபாய அறிவிப்பு முறை ஒன்று இருந்தபோதிலும் உங்கள் சொந்த வீட்டுக்கு புகையபாய அறிவிப்புக் கருவி ஒன்று அவசியம்.



இடைஞ்சல் இருத்தலாகாது



# MAKE A BEDTIME CHECK

## படுக்கை வேளையில் சோதனை ஒன்றை நடத்துங்கள்



**You are more at risk from a fire when asleep. So it's a good idea to check your home before you go to bed.**

நீங்கள் உறங்கும்போது தீயினால் ஏற்படும் அபாயம் கூடுதலாக உள்ளது. ஆகவே படுக்கைக்கு செல்லுமுன் வீட்டைச் சோதித்துப்பார்த்துக் கொள்வது ஒரு சிறந்த யோசனையாகும்.

# Check list

# செய்யவேண்டியவற்றின் பட்டியல்


- ☐ Close inside doors at night to stop a fire from spreading.
- ☐ Turn off and unplug electrical appliances unless they are designed to be left on – like your freezer.
- ☐ Check your cooker is turned off.
- ☐ Don't leave the washing machine on.
- ☐ Turn heaters off and put up fireguards.
- ☐ Put candles and cigarettes out properly.
- ☐ Make sure exits are kept clear.
- ☐ Keep door and window keys where everyone can find them.


- ☐ தீ பரவுவதைத் தடுக்கும் வகையில் இரவில் உட்புறக் கதவுகளை மூடுங்கள்.
- ☐ மின்சார கருவிகளை நிறுத்தி, அவற்றைக் குழிவுகளிலிந்து அகற்றி விடுங்கள் - அவை உங்கள் குளிரூட்டிகள் போன்ற, தொடர்நது இயங்கிக்கொண்டிருக்கவேண்டிய கருவிகளாக இருந்தால் ஒழிய.
- ☐ உங்கள் சமையலடுப்பு அணைக்கப்பட்டுள்ளதா எனறு சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- ☐ சலவை எந்திரத்தை இயங்கும் நிலையில் விட்டு வைக்காதீர.
- ☐ வெப்பமேற்றிகளை நிறுத்தி தீக்கவசங்களைப் போடவும்.
- ☐ மெழுகுவர்த்தி சிகரெட்டு-க்களை முறையாக அணைத்துவிடுங்கள்.
- ☐ வெளியேறும் வாயில்கள் இடைஞ்சலின்றி இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- ☐ ஒவ்வொருவருக்கும் தெரியககூடிய இடத்தில் கதவு மற்றும் ஜன்னல் சாவிகளை வைக்கவும். .

**Top tip**

**முக்கிய சேதி**






**Close inside doors at night**

**இரவில் உட்கதவுகளை மூடி வைத்திருக்கவும்**



# SMOKE ALARMS SAVE LIVES

For a free home fire risk check contact your local fire and rescue service. The phone number is also in the telephone book (not 999). Or visit www.direct.gov.uk/firekills

## புகையபாய அறிவிப்பு கருவிகள் உயிர் காக்கும்

இலவச புகையபாய அறிவிப்புக் கருவி ஒன்றைப் பெறுவதற்கு உங்கள் உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி எண் தொலைபேசி ஏட்டிலும் உண்டு (999 அல்ல) அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லுங்கள்:
www.direct.gov.uk/firekills

Published by the Department for Communities and Local Government. ©Crown copyright 2008.
Printed in the UK June 2009 on paper comprising no less than 75% post-consumer waste. Product code FS069TA